# DEPOSITION OF WITNESS
# (Chapter XXIII Code of Criminal Procedure)
# IN THE COURT OF DISTRICT MUNCIF CUM JUDICIAL MAGISTRATE, KODAVASAL

| | | |
|---|---|---|
| Case No. | : | S.T.C NO.1/2024 |
| Deposition of witness | : | P.W.5 |
| List of witness | | L.W.5 |
| Name | : | ரட்சகநாதன் |
| Father's /Husband Name | : | சபஸ்டியன் |
| Village | : | வெள்ளமண்டபம் |
| Taluk | : | குடவாசல் |
| Age | : | 58 |
| Occupation | : | விவசாயம் |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 on 8th day May 2026.
Accused absent. Petition U/s 355 BNSS filed and allowed.

**முதல் விசாரணை**

நான் தற்போது மேற்படி முகவரியில் வசித்து விவசாயம் செய்து வருகிறேன். அ.சா.1 மற்றும் அ.சா.2 ஐ எனக்கு தெரியாது. எதிரியை எனக்கு தெரியாது. கடந்த 2017 ஆம் வருடம் தேதி மாதம் நினைவில்லை மேலராமன்சேத்தி கிராமத்தில் பேருந்து நிறுத்தம் அருகே போலீசார் அங்கு நின்று கொண்டு விசாரித்து கொண்டிருந்தார்கள். அங்கு ஒரு பெண்மணி உட்கார்ந்திருந்தார். நான் அவ்வழியாக சென்ற போது குடவாசல் போலீசார் விசாரிப்பதற்காக என்னிடம் கையொப்பம் கேட்டார்கள். நானும் அவ்வழியாக வந்த ராஜேந்திரன் என்பவரும் கையொப்பம் செய்து கொடுத்தோம். என்னிடம் காட்டப்படும் பார்வை மகசரில் என்னுடைய கையொப்பம் எதுவும் இல்லை. அதன் பின்னிட்டு போலீசார் என்னை விசாரித்தார்கள்.

**அரசு தரப்பு சாட்சி அரசு தரப்பிற்கு ஆதரவாக பகுதியாக சாட்சியம் அளிக்காததால் இந்திய சாட்சிய சட்டம் பிரிவு 154 பிரிவின் கீழ் பகுதி பிறழ் சாட்சியாக அனுமதிக்கபட்டு அரசு தரப்பில் சாட்சியை குறுக்கு விசாரணை செய்ய அனுமதி கோரியதன் பேரில் வழக்கு கோப்பின் ஆவணங்கள் பரிசீலனை செய்யப்பட்டு அரசு தரப்பில் குறுக்கு விசாரணை செய்ய அனுமதி வழங்கப்பட்டு அரசு தரப்பில் குறுக்கு விசாரணை**

கடந்த 21.02.2017 ம் தேதி குடவாசல் போலீசார சம்பவ இடத்தை பார்வையிட்டு பார்வை மகசர் மற்றும் மாதிரி வரைபடம் தயார் செய்தார்கள் என்றும், அதில் நானும் ராஜேந்திரன் என்பவரும் கையொப்பம் செய்தோம் என்றும், போலீசார் வாக்குமூலத்திலும் விசாரணையிலும் கூறிவிட்டு

தற்போது பார்வைமகசரில் என்னுடைய கையொப்பம் இல்லை என்று உண்மை சம்பவத்தை மறைத்து எதிரிக்கு ஆதரவாக சாட்சியமளிக்கறேன் என்றால் சரியல்ல.

**<u>எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை</u>** :-

பார்வைமகசரில் உள்ள விவரங்களை நான் படித்து பார்க்கவும் இல்லை என்றாலும் போலீசார் படித்து காண்பிக்கவும் இல்லை என்றாலும் சரிதான். நான் காவல்நிலையத்தில் கையொப்பம் செய்து விட்டு சம்பவ இடத்தில் கையொப்பம் செய்ததாக அ.சா.1 க்கு ஆதரவாக பொய்சாட்சியமளிக்கிறேன் என்றால் சரியல்ல.

**<u>மறு விசாரணை</u>** இல்லை.

Taken down by the typist under my dictation in open Court read over to the witness admitted and acknowledged by him to be Correct.

MOHAMED ARSHAD FAREED M

Digitally signed by MOHAMED ARSHAD FAREED M
Date: 2026.05.08 11:06:58 +0530

`

District Munsif -Cum-
Judicial Magistrate,
Kodavasal.